திருவாரூர், திருத்துறைப்பூண்டி, எல்லா இடங்களிலே இருக்கின்ற தீயணைப்பு வண்டிகள் வேகமாக வந்து . . (குறுக்கீடு) நான் பேசுவதை வேண்டுமென்றே கெடுக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களா நீங்கள்? *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி. நம்முடைய அமைச்சர் முழு விவரமும் உங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார். நீங்கள் குறுக்கிட வேண்டாம். திரு. இராஜேந்திரன் அவருடைய தொகுதிக்கு ஏதாவது வாங்க வேண்டும் என்பதற்காகப் பேசியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: எல்லாம் மிக விரைவில், 90 நிமிடங்களில் இவைகள் எல்லாம் நடைபெற்று அணைக்கப் பட்டிருக்கிறது. எப்படியோ அணைக்கப்பட்டிருக்கிறது. அவைகளை யெல்லாம் மிக விரைவாகச் செய்தார்கள் என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜேந்திரன் கூட பாராட்டியிருக்கிறார். அவர் தெரிவித்தபடி அங்கே வருவாய்த்துறை அதிகாரிகளும் முகாமிட்டிருக் கிறார்கள். அது மட்டுமல்லாமல், காவல் துறையினர் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வது இல்லாமல், அவர்களும் அங்கே பாதுகாப்புக்காக இருக்கிறார்கள். வழக்கமாக நம்முடைய அனுமதி இல்லாமல் கூட, இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் ஏற்பட்டால், வருவாய்த் துறையிலே என்ன செய்ய வேண்டுமோ, அதை 8 ஊர்களுக்கு மட்டும் 500 ரூபாயும், 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணையும், ஒரு வேட்டியும், சேலையும், கொடுத்திருக்கிறார்கள். அங்கே ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக கடைகள் 80 கடைகள் திரு. இராஜேந்திரன் அவர்கள் சொன்னார் 30, 40 கடைகள் என்று -80 கடைகள் அங்கே இரையாகியிருக்கின்றன. அவர்கள் சாதாரணமாக தொழிற் செய்யக் கூடியவர்கள் என்பதும் அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு அதைப்பற்றி என்ன செய்வது என்பதும், மற்ற வங்கிகள் மூலமாகவும், மற்றவர்கள் மூலமாகவும் எப்படியாவது உதவி செய்வதற்கு, அரசு எப்படியாவது உதவி செய்து அவர்களை முன்னேற்றுவதற்கு, சிந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அறிவிப்பு

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழு தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் மருத்துவப் பல்கலைக் கழக நிர்வாகக்குழு மற்றும் மாநில நூலகக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களையும், தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் மருத்துவப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஒரு உறுப்பினரையும் மற்றும் மாநில நூலகக் குழுவிற்கு ஒரு உறுப்பினரையும் இச்சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப் படுபவரின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும். இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு இப்பதவிகளின் காலம் முடிவடையும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 20-4-1993 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 21-4-1993 புதன்கிழமை 3.00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 22-4-1993 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை வெற்றிடங் களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 27-4-1993 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கும் பிற்பகல் 1.30 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

4. கவன ஈர்ப்பு.

(அ) பேராவூரணித் தொகுதி பெருமகளூர் மேல்நிலைப்பள்ளிக் கட்டிடம் இடிந்துள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார் திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதி பெருமகளூர் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடம் இடிந்துள்ளது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கல்வி அமைச்சர்.